**திரு. பா. ரா தாமஸ்:** முதன் முதலாக 1—1—1971 அன்றும், அடுத்து 1—4—1973 அன்றும், அடுத்து 1—4—1974 அன்றும், அடுத்து 1—4—1975 அன்றும் தேர்வு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் இன்னும் தேர்வு நிலை வழங்கப்படாமல் இருந்தால், அவைகளை உடனடியாக வழங்கக்கூடிய அளவில் ஆணை பிறப்பிக்க மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்வு நிலை கொடுக்கப்பட்டுவிட்டது. அதிலே இடைநிலை ஆசிரியர்கள் 326, இளநிலை ஆசிரியர்கள் 343, பட்டதாரி ஆசிரியர்கள் 5, தொழில் ஆசிரியர்கள் 3, தமிழாசிரியர்கள் 3, உடற்பயிற்சி ஆசிரியர்கள் 5, ஓவிய ஆசிரியர் 1, ஆக மொத்தம் 686 ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட்டுவிட்டது. சில ஆசிரியர்களுக்கு இன்னும் ஊதிய நிலுவை வழங்கப்படவில்லை. அதைக் கொடுப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

## பருவகாலப் படி.

*** 118.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குற்றாலம் போன்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பணிபுரிகிற ஆசிரியர், ஆசிரியர் அல்லாத இதர அரசு ஊழியர்களுக்கு அந்தந்த இடங்களில் உள்ள பருவகாலப்படி (Seasonal Allowance) கொடுக்கிற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) வினா எழாது.

(முற்பகல் 10-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** குற்றாலம் போன்ற பருவகால முக்கியத்துவம் வாய்ந்த, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு, அதுவும் குறிப்பாகக் குற்றாலத்திற்கு ஜூன், ஜூலை மாதங்களில் பெருவாரியான மக்கள் வருவதால், அங்கு பணி புரியும் ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத அரசு ஊழியர்கள் அனைவரும் விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே குறிப்பாக அந்த இரண்டு மாத காலத்திற்கு அவர்களுக்குப் பருவ

1981 மார்ச் 6]

காலப் படி கொடுப்பதுபற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் 'இல்லை' என்று சொன்னாலும், இது குறித்து மீண்டும் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பருவ காலப் படி என்பது தற்போது நடைமுறையில் இல்லை. உதகமண்டலத்தில் பணி புரியும் பணியாளர்களுக்குப் பருவ காலப் படி அனுமதிக்குமாறு கேட்கப்பட்டது. அந்த வேண்டுகோள் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு மூன்றாவது சம்பளக் குழு பருவ காலப் படி தர வேண்டாமென்று பரிந்துரை செய்தது. மூன்றாவது சம்பளக் குழு தன்னுடைய பரிந்துரையில், கோடை காலத்தில் உதகமண்டலத்துக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வருவதால், இயல்புக்கு மீறி பொருட்களின் விலை அதிகரிக்கும் போக்கு இருப்பதால், அந்நகரில் பணியாற்றும் பணியாளர்கள் பருவ காலப் படி கேட்டுள்ளனர். இத்தன்மையதான வசதி சிம்லா, டார்ஜிலிங் போன்ற நகரங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குக் கிடைப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவர்கள் கூற்று சரிதானா என்பதை இமாசலப் பிரதேசம், மேற்கு வங்காள அரசுகளுக்கு எழுதிக் கேட்டோம். இவ்விடங்களில் இத்தகைய படி எதுவும் வழங்கப்படுவதில்லையென நாங்கள் அறிகிறோம். இவ்விடங்களில் கொடுக்கப்படும் மலைவாழிடப் படி விதங்கள், தமிழ் நாட்டிலுள்ள படி விதங்களைக் காட்டிலும் குறைவென்று நாங்கள் அறிகிறோம். ஆகவே பருவ காலப் படி வழங்குமாறு உதகமண்டலப் பணியாளர்கள் செய்துள்ள வேண்டுகோளை நாங்கள் ஏற்க இயலாது என்று மூன்றாம் சம்பளக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. உதகமண்டலத்திற்கே இந்த நிலை ஏற்படும்போது, புதிதாகக் கொடுக்கும் சூழ்நிலை ஏற்படவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: உதகை போன்ற இடங்களில் ஹில் அலவன்ஸ் இருக்கிறது. ஆனால் குற்றாலம் போன்ற இடங்களில் ஜூன், ஜூலை ஆகிய இரண்டு மாதங்களில் இருக்கும் விலைவாசி, சாதாரண மக்கள் அதன் கிட்டவே போக முடியாத அளவிற்கு இருக்கிறது. பிற மாநிலங்களில் இல்லையென்றாலும், நமது அரசு முன்மாதிரியாக பருவ காலங்களில் சுற்றுலாச் சிறப்பிடமாக உள்ள இடங்களுக்கு பருவ காலப் படி அளிப்பதுபற்றிப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கெனவே இவ்வாறு விண்ணப்பங்கள் தரப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதற்குப் பின்புதான், இது தேவையில்லை என்ற முடிவிற்கு வந்தோம். மீண்டும் வரும் சம்பளக் குழு அதைப்பற்றி ஆராயலாம்.

[1981 மார்ச் 6

டாக்டர் இரா. சனார்த்தனம்: சிம்லா போன்ற இடங்களில் இத்தகைய படி வழங்கப்படுவதில்லை என்று கண்டறிந்ததாகச் சொன்னார்கள். இருந்தாலும், எல்லா மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக, நீலகிரியில் பணி புரிபவர்களுக்கு, இந்தப் படியை அளித்து, தமிழகம் நல்ல பெயரைப் பெறும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த வகையில் முன் மாதிரியாக இருக்க வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வெளி மாநிலங்களில் வழங்காததை, இங்கே வழங்கி முன்மாதிரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்படிப்பட்ட பகுதிகளில் ' எக்ஸ்பென்சிவ் லொகாலிடி அலவன்ஸ் ' என்று வழங்கப்பட்டதை இப்போது அரசு ரத்து செய்திருக்கிறது. எனவே ரத்து செய்வதற்கு முன்மாதிரியாக அரசு இருந்திடலாமா? அதைத் திரும்ப வழங்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலே படித்துக் காட்டியபடி, ஏற்கெனவே கொடுத்ததுகூட மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரையை முன்னிட்டுத்தான் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரையை ஏற்றுத்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சுற்றுலாத் தலங்களில் விலைவாசி உயர்ந்து காணப்படுவதால், மத்திய அரசு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பணியாற்றுபவர்களுக்கு, cost compensatory allowance என்று கொடுத்து, விலைவாசி உயர்வை ஈடுகட்டுவதற்கான படி தருவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி மத்திய அரசு கொடுப்பது உண்மையென்றால், அந்த விவரங்களைச் சேகரித்து, அந்த அடிப்படையிலே நமது மாநிலத்திலும் அந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போன்று, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மத்திய அரசு அத்தகைய படியைக் கொடுத்தால், அதே இடங்களில் மாநில அரசு கொடுக்காமல் இருந்தால், மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தை ஆராய்ந்து பார்க்கலாம்.